# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூன்- 2017
# Term Examination, June - 2017

| இந்து சமயம் I | தரம் :- 13 (2017) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **01 முதல் 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவதொரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாததை இனங்காண்க.**

01) 01) விஷ்ணு 02) உஷை 03) சூரியன் 04) இராத்திரி 05) சுக்கிரன் ( )

02) 01) பாகவத புராணம் 02) நாரதீய புராணம் 03) விஸ்ணுபுராணம் 04) கருட புராணம் 05) பத்ம புராணம் ( )

03) 01) பராந்தகன் 02) இராஜராஜன் 03) விஜயபாலன் 04) 1ம் குலோத்துங்கன் 05) இராஜசிம்மன் ( )

04) 01) பிரதியட்சம் 02) அனுமானம் 03) ஆப்தவாக்கியம் 04) உபமானம் 05) பிரகிருதி ( )

05) 01) சிவஞானபோதம் 02) சிவஞானசித்தியார் 03) சிவப்பிரகாசம் 04) ஞானவாசிட்டம் 05) திருவருட்பயன் ( )

❖ **06-10 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 5 சோடிப் சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. பொருந்தாத அச்சோடிச் சொல்லை இனங்காண்க.**

06) 01) உத்ததாலர் - சுவேதகேது 02) யமன் - நசிகேதன் 03) ஞாஞ்ஞ வல்லியர் - மைத்ரேயி 04) நாரதர் - இந்திரன் 05) ஜனகன் - ஞாஞ்ஞ வல்லியர் ( )

07) 01) யோகம் – பதஞ்சலி 02) சாங்கியம் – கபிலர் 03) வைசேடிகம் - சிறிகரர் 04) அத்வைதம் - சங்கரர் 05) விசிட்டாத்வைதம் - இராமானுஜர் ( )

08) 01) உமாபதி சிவாச்சாரியார் - திருவருட்பயன்
02) காளிதாசர் - சாகுந்தலம்
03) இராஜேந்திரசோழன் – வானவன் மாதேவீஸ்வரம்
04) ஹரப்பா – சேர் ஜோன் மார்ஷல்
05) சிம்மவிஸ்ணு - மதுரை மீனாட்சியம்மன் ( )

09) 01) வரதபண்டிதர் – பிள்ளையார் புராணம்
02) மயில் வாகனப்புலவர் - யாழ்ப்பாண வைபவ மாலை
03) சின்னத்தம்பிப்புலவர் - கரவை வேலன் கோவை
04) சிவசம்புப் புலவர் - செகராசசேகரமாலை
05) போசராசப் பெருமாள் – சரசோதி மாலை ( )

10) 01) நடராஜமூர்த்தம் - மார்கழி திருவாதிரை 02) இலிங்கோற்பவமூர்த்தம் - சிவராத்திரி 03) அர்த்தநாதீஸ்வரர் - கேதாரகௌரிவிரதம் 04) நந்தி – சோமவாரவிரதம் 05) கல்யாணசுந்தரமூர்த்தி – பங்குனி உத்தரம் ( )

❖ **11 தொடக்கம் 15 வரையான வினாக்களில் அ,ஆ எனும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலில் உள்ளவை 'ஆ' நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடையவை. அ நிரலில் உள்ளவற்றை ஆ நிரலில் உள்ளவற்றுடன் ஒழுங்குபடுத்தும் போது ஐந்து சேர்மானங்களில் சரியானதாக அமைவதை தெரிவு செய்க.**

11)

| அ | ஆ |
|---|---|
| 01) சாலோக முத்தி | A – மாணிக்கவாசகர் |
| 02) சாமீப முத்தி | B – ஜீவன் முத்தர் |
| 03) ஜீவன் முத்தி | C – நாவுக்கரசர் |
| 04) சாரூப முத்தி | D – சுந்தரர் |
| 05) சாயுச்சிய முத்தி | E – திருஞானசம்பந்தர் |

01) ABCDE 02) ADBEC 03) BDAEC 04) CEBDA 05) DACBE

( )

12)

| அ | ஆ |
|---|---|
| 01) பிரமசொரூபம் | A – வெளிப்பட வடிவம் |
| 02) வியூகம் | B – மேலான வடிவம் |
| 03) விபவம் | C – வழிபடுவதற்குரிய வடிவம் |
| 04) அந்தர்யாமி | D – தோன்றி வந்த வடிவம் |
| 05) அர்ச்சாவதாரம் | E – உள்ளுறை வடிவம் |

01) ADEBC 02) BADEC 03) BEADC 04) DBACE 05) EABDC

( )

13)

| அ | ஆ |
|---|---|
| 01) சிவபுராணங்கள் | A – நான்கு |
| 02) விஷ்ணு புராணங்கள் | B – ஒன்று |
| 03) அக்கினி புராணம் | C – இரண்டு |
| 04) சூரிய புராணம் | D – ஒன்று |
| 05) பிரம புராணம் | E – பத்து |

01) BDCAE 02) BDEAC 03) BEACD 04) DBACE 05) EABDC

( )

14)

| அ | ஆ |
|---|---|
| 01) படைத்தல் | A – மோதகம் இருக்கும் கரம் |
| 02) காத்தல் | B – அமுத கலசம் |
| 03) அழித்தல் | C – பாசம் கொண்டிருக்கும் கை |
| 04) அருளல் | D –எழுத்தாணி பிடிக்கும் கரம் |
| 05) மறைத்தல் | E – அங்குசம் ஏந்திய கை |

01) ADECB 02) CEDAB 03) DAEBC 04) DBACE 05) DEABC

( )

15)

| அ | ஆ |
|---|---|
| 01) இராஜஇராஜன் | A- குடைவரைக்கோயில் |
| 02) மகேந்திரவர்மன் | B – விஸ்னு சித்தியம் |
| 03) கிருஷ்ணதேவராயர் | C – தஞ்சைபெருவுடையார் |
| 04) சமுத்திரகுப்தன் | D- கங்கை கொண்ட சோழேச்சரம் |
| 05) இராஜேந்திரன் | E – அசுவவேதயாகம் |

01) ACBDE 02) DEACB 03) CABED 04) ABDCE 05) EDBAC

( )

❖ **16 தொடக்கம் 20 வரையான வினாக்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடையவை அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் பொருத்தமான சேர்மானங்களை தெரிவு செய்க.**

| | | |
|---|---|---|
| A – 54 சூத்திரம் | B – கர்ஷணம் | C – சகலாகம பண்டிதர் |
| D – தீட்சை | E – திருப்பெண்ணாகடம் | F – சிவம் |
| G – நாதம் | H – சைவ நாற்பாதம் | I – 4 அத்தியாயம் |
| J – உற்சவம் | K – சதாசிவம் | L – திருமந்திரம் |

16) பிரமசூத்திரத்துடன் தொடர்புடைய தொகுதி.
1) EB 2) AD 3) BJ 4) AI 5) BC
( )

17) இறைவனை அருவத் திருமேனியுடன் தொடர்புடைய தொகுதி.
1) AC 2) AI 3) BD 4) FG 5) DL
( )

18) மெய்கண்ட தேவருடன் தொடர்புடைய தொகுதி.
1) EC 2)AB 3)KI 4)JB `5)AD
( )

19) முத்திக்குரிய சாதனங்களாக அமையும் தொகுதி.
1) EL 2) KA 3) AB 4) AC 5)DH
( )

20) ஆகமங்கள் கூறும் கோயிற்கிரியைகளுடன் தொடர்புடைய தொகுதி
1) BJ 2) AC 3) EF 4) AE 5) AJ
( )

❖ **21 தொடக்கம்** 25 **வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும்** ஒரு தலைப்பின் **ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன.** அவற்றுள் **உரிய** தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.

21) உபநிடதமும் இந்துத் தத்துவங்கள்
1) பிரபஞ்ச உண்மைகளை விளக்குபவை உபநிடதங்களாகும்.
2) ஆன்மாக்களதும் இறைவனதும் இருப்புப்பற்றி உபநிடதமும் கூறுகிறது.
3) இந்துத் தத்துவங்கள் உபநிடத மகாவாக்கியத்திற்கு விளக்கமானதாகும்.
4) சமண, பௌத்த தத்துவங்கள் உபநிடத சிந்தனைகளின் மேல்காட்டியெழுப்பப்பட்டமை.
5) இந்துக்களின் வாழ்வியல் சிந்தனைகளை கூறும் நூல் உபநிடதமாகும்.
( )

22) உமாபதி சிவாச்சாரியார்
1) இவர் சிவஞானபோதம் எனும் நூலுக்கு சிவப்பிரகாசம் எனும் வழிநூலை எழுதியவர்.
2) தில்லைச் சிவனின் திருவருளால் பெற்றான் சம்பானுக்கு முத்தி கொடுத்தார்.
3) சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்களை எழுதி சைவ சித்தாந்த உருவாக்கத்திற்கு பணி புரிந்தார்.
4) தில்லைக் கொற்றவன் குடியில் புறந்தவர் தமிழ் வடமொழியில் வல்லவர்.
5) இவர் திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம் முதலிய நூல்களையும் எழுதினார்.
( )

23) அருட்பாவின் மேன்மை.
1) தேவாரங்கள் தேவாரமுதலிகளால் பாடப்பட்டவை.
2) தேவாரங்கள் இறைவனின் இருப்பை நிறுவியமை.
3) தேவாரங்கள் தெய்வத்தன்மை பொருந்தியமை.
4) தேவாரங்கள் ஆன்மாக்களை மரணப்பயத்தினின்று விடுவிப்பவை.
5) தேவாரங்கள் அபரக்கிரியையின் போது பாடக்கூடாதவை.
( )

24) திருவிழாவும் நடத்தை மாற்றலும்
1) திருவிழாவும் விழாவும் ஒரு பொருட் சொற்கள் ஆகும்.
2) இறைவனைப்பற்றி சிந்திப்பதற்கோர் இடமாக திகழ்வது திருவிழாவாகும்.
3) பெரும்பாலும் விழாக்கள் இன்பம் தரும் நிகழ்வுகளினை இசைவாக்கத்துடன் நிகழ்த்துவனவாகும்.
4) பக்தனை அவ்வவ்போழுது புறவுலகில் வாழ்க்கையின்றி விடுபடச் செய்து தெய்வீக பலத்தைப் பெற வழிகாட்டுவதும் திருவிழாவாகும்.
5) பக்தன் தூய்மை பக்தி, பலம் முதலானவற்றைப் பெறுவதோடு விட்டுக் கொடுத்தல்., கூட்டுறவு முதலான சமூகப் பொறுப்புக்களையும் பெற்றுக் கொள்ளவும் திருவிழா இடமளிக்கிறது.

( )

25) அவத்தையும் ஆணவமும்
1) வேதாந்தம் சீவாத்துமாவின் இன்ப துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம் அவத்தையே எனக் குறிப்பிடுகிறது.
2) சைவசித்தாந்தம் ஆன்மாவின் வினைப் பயன்களுக்கு அடிப்படை ஆணவமே என்று குறிப்பிடுகிறது.
3) வேதந்திகள் சீவாத்துமாக்களின் ஆன்ம விடுதலைக்குத் தடையாக இருப்பது.
4) சித்தாந்திகள் ஆணவம் ஆன்மாவோடு அத்துவிதப்பட்டிருப்பது ஆண்மாவின் விடுதலைக்கு தடை என்பார்.
5) வேதாந்த, சித்தாந்த கொள்கைகளின் அடிப்படையில் அவித்தையும் ஆணவமும் பெரிதும் ஒத்திருக்கும்.

( )

❖ **26 தொடக்கம்** 30 வரையான ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் **ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன.** அவற்றுள் மிகப்பொருத்தமானதைத் தெரிவு செய்க.

26) பக்தியும் சாதனையும்
1) பக்தி இறைவனை அடைவதற்கு சாதனமாகும்.
2) இருக்குவேதம் இனக்குழு சார்ந்த பக்தி இலக்கியமாகும்.
3) இதிகாசங்கள் மனிதனின் ஒழுகலாறுகளுக்கு முக்கியம் அளிப்பவை.
4) புராணங்கள் நடத்தைகளை நெறிகளாக கற்பிப்பன.
5) தேவாரமும் திருவாசமும் பக்திக்கும் முத்திக்கும் சாதனமாகும்.

( )

27) சாந்த பாவம்
1) நண்பர்களுக்கிடையிலான உயர்ந்த நட்பைக் குறிப்பது.
2) மனைவி கணவனிடத்தில் கொள்ளும் அன்பைக் குறிப்பது.
3) காதலர்களுக்கிடையே கொள்ளும் அன்பை உணர்த்தி நிற்பது.
4) குழந்தைகளுக்கு தாய்மேல் உள்ள பாசத்தைக் குறிப்பது.
5) தாய் குழந்தை மீது கொண்டுள்ள பாசத்தை குறிப்பது.

( )

28) ஆச்சிரம தர்மங்கள்
1) வானபிரஸ்த நிலை என்பது சந்நியாச நிலைக்கான பயிற்சிக் காலமாகும்.
2) பிதிர் யக்ஞம் என்பது உருவ வடிவான கடவுளுக்கு ஆற்றும் வழிபாடாகும்
3) குருகுலக் கல்வியின் பிரதான நோக்கம் மாணவனுக்கு உலகியல் பேறுகளை வழங்குதலாகும்.
4) ஐவகை வேள்விகளும் சந்நியாச நிலையிலுள்ளவரால் ஆற்றப்பட வேண்டியவையாகும்.
5) இந்து ஒருவனின் வாழ்வில் 3ம் படிநிலை கிருகஸ்தம்

( )

29) தட்சணாமூர்த்தி காட்டும் தத்துவம்.
1) சிவாலயங்களில் தென்திசையை நோக்கி வீற்றிருப்பவர்
2) இறைவன் குருவாக எழுந்தருளிய வடிவமாகிய இது சிவமூர்த்தங்களுள் ஒனறாக விளங்குபவை.
3) வியாக்யான தட்சணாமூர்த்தி சிவாலயங்களில் அதிகமாகக் காணப்படும்.
4) பகவானது பாசத்தில் இருந்து நீங்கி பக்தியை அடைதலைச் சுட்டுவது
5) யோக தட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சாணமூர்த்தி, வீணாதர தட்சணாமூர்த்தி என04 வகைப்படும். ( )

30) கண்ணகி வழிபாடு
1) இவ்வழிபாட்டின் தோற்றமும் முதன்மையும் மணிமேகலையுடன் ஆரம்பமாகிறது.
2) சேரன் செங்குட்டுவன் கி.பி 5ம் நூற்றாண்டில் கண்ணகிக்கு விழா எடுத்தான்
3) ஊர்காவல் பண்ணுதல், மடை வைத்தல் என்பன இறுதி நாள் சடங்காக நடைபெறும்
4) நோய் நீக்கம், மழைவளம், பயநீக்கம் முதலியவற்றுக்காக கண்ணகியை வழிபடுவர்
5) கண்ணகி வழிபாட்டில் கதவு திறந்த பின்னர் ஏடுபடித்தல் இடம்பெறும்.

( )

❖ **இந்து சமயம் கூறும் நீதி நூல்களில் ஒன்றான திருக்குறள் பற்றிய கருத்தியல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாக கொண்டு 31 – 33 வரையான வினாக்களுக்கு பொருத்தமான சேர்மானத்தைத் தருக**

A – தமிழில் தோன்றிய அறநூல்களில் எக்காலத்துக்கும் பொருந்தக் கூடிய கருத்துச் செறிவு நூல் நீதி நூலாகும்

B – திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரை பொய்யாமொழிப்புலவர், தெய்வப் புலவர் எனப் போற்றுவர்.

C – திருக்குறளினூடாக சமூக சமுதாயத்திற்கு வேண்டிய சமூக அரசியல் பொருளாதார பண்பாட்டு மாற்றங்களுக்கான மெய்யியற் கோட்பாட்டை திருவள்ளுவர் திருக்குறளில் வழங்கியுள்ளமை திருவள்ளுவரின் சிறப்பைக் காட்டுகின்றது.

D – திருக்குறள் அறத்துப் பால், பொருள்பால், காமத்துப்பால் என 3 பிரிவுடையது.

E - இந்நூல் 133 அதிகாரங்களை உடையது. ஒவ்வொரு அதிகாரமும் 10 குறள்களைக் கொண்டு 1330 குறட்பாக்கள் கொண்டுள்ளது.

F – திருக்குள் கி.பி20ம் நூற்றாண்டுகளில் வாழ்க்கைச் சடங்குகளுக்குப் பயன்படுத்தவும் வாழ்வியல் வழிகாட்டியாகவும் பண்பாட்டின் குறியீடாகவும் கருதப்படுகிறது.

31) திருக்குறள் நூல் அமைப்பை வெளிப்படுத்தும் தொகுதி

1) DC  2) BC  3) AC  4) Da  5) EA  ( )

32) திருக்குறளின் சிறப்பை வெளிப்படுத்தும் சேர்மானம்.

1) AF  2) CD  3) BE  4) AF  5) FE  ( )

33) திருக்குறளினடாக திருவள்ளுவரின் சிறப்பை வெளிப்படுத்தும் சேர்மானம்.

1) AC  2) BD  3) BC  4) EF  5) BF  ( )

❖ **34 தொடக்கம் 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழ் தரப்பட்டுள்ள மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

34) விஷ்ணுவின் பரத்துவத்தை எண்ணும் போது சொல்லப்பட வேண்டிய மந்திரம்.

1) மாதவன்  2) மதுசூதனன்  3) கோவிந்தன்
4) நாராயணா  5) தாமோதரன்  ( )

35) சைவாலயக்கிரியைகளுள் மூன்று பொது அம்சங்கள் அடங்கும் தொகுதி

1) அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம்
2) தீபாரனை, அர்ச்சனை, பிரதோஷம்
3) தோத்திரம், கலசபூசை, நிருத்தியம்
4) பூதசுத்தி, அபிஷேகம், அலங்காரம்
5) நைவேத்தியம், தீபாராதனை, ஜெபம்  ( )

36) வைரவ விரதங்களில் ஒன்று,

1) சிவராத்திரி  2) நவராத்திரி  3) சித்திரைப்பரணி
4) ஏகாதசி  5) பிரதோஷம்  ( )

37) சுந்தர மூர்த்தி நாயனார் பெற்ற தீட்சை யாது.

1) நயன தீட்சை  2) ஸ்பரிச தீட்சை  3) நிர்வாண தீட்சை
4) விசேட தீட்சை  5) சமய தீட்சை  ( )

38) சைவ சித்தாந்த நூல்களுள் காலத்தால் முற்பட்டதாகக் கருதப்படும் நூல்

1) சிவஞானபோதம்  2) சிவஞான சித்தியார்  3) திருக்களிற்றுப்படியார்
4) திருவுந்தியார்  5) சிவப்பிரகாசம்  ( )

39) சைவ சமயத்தின் படி கட்டாயமாக தவிர்க்கப்பட வேண்டிய மூன்று கருமங்கள் அடங்கும் தொகுதி

1) சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை
2) சிவதோத்திர நிந்தை, பொதுமகளிரை நாடல், உயிர்க் கொலை
3) பிறர்மனை நாடல், சிவசாத்திர நிந்தை, பலியிடல்
4) குருநிந்தை, சிவதோத்திரநிந்தை, முதியோரை மதியாமை
5) சிவனடியார் நிந்தை, சிவதோத்திர நிந்தை, கவர்ச்சியோடு கோயில் செல்லல்.

( )

40) சிவவிரதங்களுள் மிக்க மேலான விரதம்

1) பிரதோசம் 2) சோமவார விரதம் 3) மகாசிவராத்திரி
4) கேதாரவிரதம் 5) சூலவிரதம் ( )

41) இந்து தரிசனங்கள் ஒன்றின் பெயர்

1) ஸ்ரீ உருத்திரம் 2) ஸ்வேதாஸ்வரம் 3) பௌத்தம்
4) மீமாம்சை 5) பிரம்மசூத்திரம் ( )

42) சிவஞான சித்தியர் சைவசித்தாந்த நூல்களில் ஒன்றாகும். அந்நூலில் இடம்பெறும் பரபக்கம் என்ற பகுதியில் உள்ளடங்குவது

1) சைவசமயம் சார்பான கருத்துக்கள்
2) தேவாரங்களை ஏற்றிப் போற்றும் கருத்துக்கள்
3) சைவ சமயத்துக்கு மாறானவற்றைக் கண்டிக்கும் கருத்துக்கள்
4) கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான கருத்துக்கள்
5) பதி,பசு, பாசம் ஆகியவற்றை ஏற்பது பற்றிய கருத்துக்கள் ( )

43) இறைவன்( சிவன்) உகந்தேற்கும் நூல்கள் எனக் கருதப்படுபவை.

1) வேதங்கள் 2) ஆகமங்கள் 3) உபநிடதங்கள்
4) தேவாரம் - திருவாசகம் 5) பிரஸ்தான திரயம் ( )

44) விதிக்கப்பட்ட கருமத்தைச் செய் செயலின் மையை விட செயல் சிறந்தது என்ற கூற் இடம் பெறும் நூல்

1) தர்ம சாஸ்திரம் 2) உபநிடதம் 3) பகவத்கீதை
4) ஆத்திசூடி 5) பிரம்மசூத்திரம் ( )

45) சந்தான மணி எனும் சோதிட நூலை இயற்றியவர்

1) செகராச மன்னன் 2) வசிட்டர் 3) போசராச பண்டிதர்
4) இராமலிங்க முனிவர் 5) சபாபதி சோதிடர் ( )

46) மெய்கண்ட தேவர் முத்தி பெற்ற தினம்

1) ஐப்பசி சுவாதி 2) புரட்டாதி பூசம் 3) ஆவணி உத்தரம்
4) சித்திரை அத்தம் 5) சித்திரைச் சதயம் ( )

47) தச காரியங்கள் அடங்கும் தொகுதி.

1) நாதம், விந்து, சதாக்கியம்
2) சாங்கியம், யோகம், நியாயம்
3) பிராணாயம், பிரத்தியாகாரம், சமாதி
4) தத்துவரூபம், ஆன்மரூபம், சிவரூபம்
5) தீட்சை, வியாகரணம், சோதிடம் ( )

48) ஈழத்தில் தோற்றம் பெற்ற முதற் சோதிட நூல் என்பது

1) சரசோதி மாலை 2) செகராசசேகரமாலை 3) சந்தான தீபினக
4) அக்கினி மித்திரம் 5) சந்தான மணி ( )

49) இந்திய வானியல் ஆராச்சியாளர்கள்

1) புளிசர், ஆந்திரேயர் 2) வராக மிகிரர், சரகர் 3) சரகர், சனகர
4) பிரமகுப்தர், சுஸ்ருதர் 5) ஆரியப்பட்டர், வராகமித்திரர் ( )

50) ஔவையார் பாடிய நூல்கள்

1) ஞானக்குறள், நான்மணிக்கோவை, நல்வழி 2) நவமணிமாலை, விநோதரச மஞ்சரி, ஞானாமிர்தம்
3) கபிலகரவல், தனிப்பாடல் திரட்டு, ஆத்திசூடி 4) ஆத்தசூடி, கொன்றைவேந்தன், கபிலரகவல்
5) வாக்குண்டாம், நல்வழி, ஞானாமிர்தம் ( )

(50x2=100 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன் - 2017
## Term Examination, June - 2017

| இந்து சமயம் II | தரம் :- 13 (2017) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ "அ" பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் "ஆ" பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.

### பகுதி"அ"

01) **"சமயச் சடங்குகள் புனிதம் வாய்ந்தவையாகவும் பக்தியை வளர்க்கும் சாதனமாக அமைகின்றன.. அவற்றுள் விரதங்கள் முக்கிய இடம் வகிக்கின்றன."**

அ) விரதம் என்பதன் பொருளை வரையறை செய்க.

ஆ) சக்தி விரதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

இ) சக்தி விரதங்களில் ஒன்றான நவராத்திரி விரதம் பற்றி விளக்குக.

ஈ) விரதங்களை அனுஷ்டிப்பதன் மூலம் பெறும் நன்மைகளை விபரிக்குக.

(4+2+10+4)

02) **ஆகமம் சாராத வழிபாட்டின் முக்கியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு பினவரும் வினாக்களுக்கு விடை தருக?**

அ) சிறு தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களின் பெயர்கள் 05 தருக?

ஆ) இலங்கையின் சிறு தெய்வ வழிபாடு இடம்பெறும் இடங்கள் 05 தருக?

இ) கண்ணகி வழிபாட்டின் தோற்றத்தையும் மரபு வழிபட்ட சடங்கினையும் எழுதுக?

ஈ) சிறு தெய்வ வழிபாட்டின் பயன்கள் 04 தருக?

(3+3+10+4)

03) **"சங்கர வேதாந்தம் ஒரு தத்துவக் கோட்பாடாக உருவாகியமையை மேல்வரும் தலைப்புக்களில் எழுதுக.."**

அ) சங்கரர் ஏற்றுக் கொண்ட பிரமான நூல்கள்.

ஆ) சங்கர வேதாந்தத்தில் பிரமம்

இ) ஆன்ம விடுதலைக்கான வழிமுறைகள்

( 5+10+5)

## பகுதி"ஆ"

**04) பல்லவர் காலத்தில் கோயிற் கட்டடக்கலை பெற்ற வளர்ச்சியினை மேல்வருவனவற்றின் அடிப்படையில் விபரிக்குக.**

அ) அரசர்களின் பங்களிப்பு

ஆ) பல்வகையிலான கோயிற்கட்டட அமைப்புக்கள்

(8+12)

**05) "பகவத் கீதை கடவுளை அடையும் வழிகளாக மூவகையோகங்களைக் கூறுகின்றது." இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

அ) பகவத்கீதை கூறும் மூவகை யோகங்களையும் அதன் பொருள் விளக்கத்தையும் குறிப்பிடுக.

ஆ) பக்தி யோகத்தில் பக்தி சாஸ்திரம் கூறும் முக்கியமான 06 பாவங்களையும் தருக.

இ) கரும யோகப் பகுதியில் கூறப்பட்டுள்ள முக்கியமான விடயங்களை சுருக்கமாகத் தருக.

( 6+6+8)

**06) சைவசித்தா**ந்தம் கூறும் இறைகோட்பாட்டின் பிரதான அம்சங்களை மேல்வரும் **தலைப்புகளில் பரிசீலிக்குக.**

அ) இறைவன் உளன் என நிரூபிக்கும் முறைகள்

ஆ) இறைவனது இயல்புகள்

இ) இறைவனும் ஆன்மாவும்

(6+8+6)

**07) "இந்து** அறிவியலில் **இந்து** மருத்துவம்" என்பதை அடிப்படையாக் **கொண்டு பின்வரும் வினாக்களு**க்கு விடை தருக.

அ) இந்து மருத்துவ வளர்ச்சிப் போக்கில் முக்கியம் வாய்ந்த மருத்துவர்கள் நால்வரின் பெயர்களைத் தருக.

ஆ) இந்து வழிபாட்டு முறைகளில் காணப்படும் மருத்துவ சிந்தனைகள் எவை?

இ) இந்து மருத்துவத்தின் முக்கியத்துவம் 03 தருக.

(4+10+4)

**08) பின்வருவனவற்றில் எவையேனும் நான்கினையும் சிறுகுறிப்பு எழுதுக.**

01) இந்து போர் சு இராசரத்தினம்
02) சாங்கிய தரிசனம்
03) நடராஜர் வடிவம்
04) திருக்கோயில் வழிபாடு
05) திருக்கோணேச்சரம்
06) சிவசின்னங்கள்

(5x4=20)

The National e-learning Portal for The General Education